**இலங்கை உயிர்காப்பு சங்கம் - 2024**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை உயிர்காப்பு சங்கத்தின் (''சங்கம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பிரிவு 21அ இற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் பத்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயத்தினை தெரிவிக்கவில்லை.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் நிதி நிலைமைக்கூற்றில், வருமானக் கூற்றில், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான உருப்படிகள் மாற்று முறைமைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.
இவ்விடயங்கள் காரணமாக நிதி நிலைமைக்கூற்றில், வருமானக் கூற்றில், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ள பெறுமதிகள் அல்லது உருப்படிகளில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் சீராக்கம் செய்வது அவசியமானதா என்று உறுதிசெய்ய முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக சம்மேளனம் பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க சங்கத்தின் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வு செய்வதும் கணக்காய்வாளர் அறிக்கையை வெளியிடுவதும் எனது பொறுப்பு ஆகும். இருப்பினும், இந்த அறிக்கையின் பந்தி 1.5 இல் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியவில்லை.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 2,549,690 வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாகக் கருதப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் வருமானம் அதே தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது. | 2023ஆம் ஆண்டிற்குரிய வருமானமானது 2024ஆம் ஆண்டிற்கான வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.”. | இந்தக் கணக்கீட்டு வழுவினை சீராக்குவதற்கும், எதிர்வருங்காலங்களில் இவ்வாறான தவறுகள் மீண்டும் ஏற்படாமல் தவிர்ப்பதற்கும் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

**1.5.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்தின் முன்னாள் செயலாளரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய ரூபா 4,230,690 தொகையானது, இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரை வசூலிக்கப்படாமல் உள்ளது. | பொலிஸ் விசாரணைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை, காலதாமதமின்றி உடனடியாக வசூலிக்க வேண்டும் |

**1.5.3 கணக்காய்விற்கு எழுத்து மூலமான சான்றுகள் இல்லாதிருந்தமை**

| விடயம் | தொகை (ரூபா.) | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| செலவுகள் | 31,755,205 | பதினேழு (17) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அவற்றுக்கான மூல ஆவணங்களான பற்றுச் சீட்டுகள், விலைப்பட்டியல்கள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான பிற ஆதாரங்கள். | முந்தைய நிர்வாகமானது, சம்பந்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மற்றும் அவற்றின் மூல ஆவணங்களின் பிரதிகள் இல்லாமலேயே கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ளது. | அனைத்துக் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் மற்றும் மூல ஆவணங்களும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும் மற்றும் எதிர்வருங்காலத்தில் இத்தகைய செயற்திறனற்றகுறைபாடுகளைத் தவிர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

**1.6 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1973ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பகுதி V இன் 40ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது இந்தியாவில் நடைபெற்ற "இந்டோ-லங்கா உயிர் காப்புச் சாம்பியன்ஷிப்" போட்டியில் 24 வீரர்களும் 06 ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டிருந்தனர். எனினும், அதற்காக விளையாட்டுத்துறையின் அமைச்சரிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தைச் சமர்ப்பிக்கச் சங்கம் தவறியிருந்தது | வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களுக்கான நிதித் தேவைகள் குறித்து நாங்கள் அவர்களுக்கு எழுத்துப்பூர்வமாகத் தெரிவித்திருந்த போதிலும், இதுவரை எந்தவொரு எழுத்துப்பூர்வமான பதிலும் வழங்கப்படவில்லை. | சம்பந்தப்பட்ட அங்கீகாரங்களை இனிமேலும் தாமதிக்காமல் சங்கம் சமர்ப்பிக்க வேண்டும் மேலும் எதிர்வருங்காலங்களில் இத்தகைய செயற்திறனற்ற குறைபாடுகளைத் தவிர்க்கவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2024 மே 03 ஆந் திகதிய 2382/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க ஒழுங்குவிதிகளின் பகுதி III இன் 6(xxvii) ஆம் பிரிவு. | விளையாட்டுக் கழகங்கள், நிறுவனங்கள், மாவட்ட விளையாட்டுச் சங்கங்கள், மாகாண விளையாட்டுச் சங்கங்கள் மற்றும் உறுப்பினர் அமைப்புகளின் தேர்தல்கள் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகள் குறித்த விவரங்களையும், சங்கம் ஆண்டுதோறும் விளையாட்டு அபிவிருத்திப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும், இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படும் திகதி வரை அத்தகைய விவரங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக உறுப்பினர் சங்கங்கள் இன்னும் எமக்குத் தேவையான தகவல்களை வழங்கவில்லை. | சங்கம் சம்பந்தப்பட்ட விவரங்களை இனிமேலும் தாமதிக்காமல் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் எதிர்வருங்காலங்களில் இத்தகைய செயற்திறனற்ற குறைபாடுகளைத் தவிர்க்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2022 மே 31ஆந் திகதிய 2022/02 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவு | ஒவ்வொரு கொடுப்பனவுச் உறுதிச்சீட்டுக்களும் இரண்டு நிறைவேற்று உறுப்பினர்களினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும் மற்றும் பணம் பெறுபவரின் கையொப்பம் கட்டாயம் உறுதிச்சீட்டில் இடப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 39,423,408 மொத்தக் கொடுப்பனவுகள் தொடர்பில், சங்கம் அவ்வாறு செய்யத் | மாதாந்த சபை அங்கீகரிக்கும் போது அல்லது ஒரு மொத்தத் தொகையை மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்தும் போது மாத்திரமே சங்கம் எப்போதும் செலவினங்களை மேற்கொள்கிறது. | சங்கம் இந்த சுற்றறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தவறியுள்ளது. எனவே, இக்கொடுப்பனவுகள் போதுமான அங்கீகாரமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,777,587 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 5,158,711 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,381,124 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது செயற்பாட்டு வருமானம் ரூபா. 13,526,594 ஆல் குறைவடைந்தமை இந்த பின்னடைவிற்கான முக்கிய காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்தவ செயற்திறனின்மை

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி வசூலிக்கப்பட வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 9,053,290 ஆகும். இதில், ரூபா 431,260 மற்றும் ரூபா 102,300 ஆகிய தொகைகள் முறையே 05 ஆண்டுகளுக்கும் மேலாகவும் மற்றும் 02 ஆண்டுகளுக்கும் மேலாகவும் வசூலிக்கப்படாமல் உள்ளன. மேலும், ரீ-சேட் கொள்வனவு செய்தமைக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 260,000 தொகையானது 4 ஆண்டுகளுக்கும் மேலாகத் செலுத்தித்தீர்க்கப்படாமல் உள்ளது. | ஆதாரங்கள் இன்மையால், குறித்த தொகைகளை தற்போதைய அதிகாரிகளினால் இனங்காண முடியாமல் இருந்தது | சங்கம் வசூலிக்கப்பட வேண்டிய அனைத்து நிலுவைகளையும் வசூலிக்க வேண்டும் அத்துடன் செலுத்த வேண்டிய அனைத்துக் கொடுப்பனவுகளையும் இனிமேலும் தாமதிக்காமல் செலுத்தித்தீர்க்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமையின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டின் போது 03 வெளிநாட்டுப் போட்டிகள், 07 உள்நாட்டுப் போட்டிகள் மற்றும் 14 ஏனைய செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்குச் சங்கம் திட்டமிட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின்போது சங்கம் 02 வெளிநாட்டுப் போட்டிகளில் மட்டுமே கலந்துகொண்டிருந்தது. | உறுப்பினர் கழகங்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட பணம் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் மூலம் மாத்திரமே இப்போட்டிகள் நடத்தப்பட்டன. | சங்கம் திட்டமிட்டபடி போட்டிகளை நடத்த வேண்டும் அத்துடன் திட்டங்களைத் தயாரிக்கும் போது அவை யதார்த்தமான முறையில் அமைவதை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |